Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 36 இதழ் - 12 டிசம்பர் - 2023

தனிப்பிரதி ரூ.10/-



**10.12.2023 நெல்லையில் நடந்த இலவச மருத்துவ முகாமின்போது...**



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஆராதனையின் மாதிரி | 11 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 17 |
| 5. சிறுவர் பகுதி | 20 |
| 6. வாக்குத்தத்தத்தின் மகன்... | 21 |
| 7. பேர் சொல்லி அழைக்கும்... | 25 |
| 8. வருத்தப்பட்டு பாரம்... | 28 |
| 9. யூதர்கள் இன்றைக்கும்... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 Dec - 2023 Issue - 12


ஆசிரியர் உரை

## பரிசுத்த ஆவியானவர் யார்?

**முன்னுரை:**

**கி**றிஸ்தவ மத உலகில் மிகவும் தவறாகப் புரிந்து வைக்கப் பட்டிருக்கிற பாடங்களில் பரிசுத்த ஆவியானவர் பற்றிய பாடமும் ஒன்று. கிறிஸ்தவத்தில் உள்ள பல சபைப் பிரிவார் மத்தியில் மட்டுமல்ல, கர்த்தருடைய சபையிலுள்ள பலர் மத்தியிலும் தவறாகவே புரிந்து வைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கிறிஸ்தவர்கள் மத்தியில், பல கேள்விகள் மனதில் உள்ளன: 1. ஆவியானவர் எப்படி நமக்குள் வாசம் செய்கிறார்?, 2. யோவான் 3–ல் உள்ள ‘ஆவியினால் பிறப்பது‘ என்ன பொருள்படுத்துகிறது?, 3. அப்போஸ்தலர் 2–ல் உள்ள, பரிசுத்த ஆவியின் வரம் என்பது என்ன, அந்த வரத்தை நாம் இன்றைக்கும் பெற்றுக் கொள்கிறோமா? போன்று. இந்தப் பாடத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் நாம் கண்டிப்பாகப் பதிலளிக்க முடியாவிட்டாலும், ஒட்டுமொத்தமாக இது சம்பந்தமான முன்னுரை கொடுத்துவிட்டு, ‘பரிசுத்த ஆவியானவர் யார்?‘ என்ற கேள்விக்கான பதிலைப் பெற முயற்சிப்போம்.

பொதுவாக பரிசுத்த ஆவியானவர் பற்றிய பாடம் **ஆவிகள் பற்றி கோட்பாடு** (Pneumatology) என்று அறியப்படுகிறது. இது இப்படியாக அழைக்கப்படுவதற்குக் காரணம், கிரேக்க மொழியில் ‘ஆவி‘ என்பதற்கு ‘Pneuma‘ என்றுள்ளதால், அது பற்றிய பாடம் Pnuematology என்றாகியுள்ளது. ‘ஆவி‘ என்பதற்குக் கிரேக்கத்தில் உள்ள குறிப்பிட்ட வார்த்தையை ‘காற்று‘ அல்லது ‘மூச்சு‘ என்றும் மொழியாக்கம் செய்ய முடியும். ஆயினும், பெரும்பாலான சமயங்களில் ‘ஆவி‘ என்றே மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் spirit என்று சிறிய ‘s‘ போட்டு எழுதப்படுமானால் அது மனித ஆவியைக் குறிக்கும். அதே நேரத்தில், Spirit என்று பெரிய ‘S‘ போட்டு

எழுதப்படுமானால் தேவத்துவத்தில் ஒருவராக இருக்கும் தேவனைக் குறிக்கும்.

சரி, இப்பொழுது, 'பரிசுத்த ஆவியானவர் யார் ?' என்ற கேள்விக்குப் பதில் தேடும்படியாக, நாம் மூன்று கருத்தோட்டத்தில் பார்க்க உள்ளோம். 1. தேவத்துவத்தில் அவர் யார் 2. தேவத்துவத்தில் அவர் நிலை 3. தேவத்துவத்தில் அவர் வேலை

**தேவத்துவத்தில் அவர் யார் ?**

ஓர் நாள் ஒருவர் தன்னுடைய முகநூலில் இப்படியாகப் பதிவிட்டிருந்தார். 'நான் பரிசுத்த ஆவிக்காகவும், அது என்னைப் பெலப்படுத்துகிறதற்காகவும் நன்றியுடையவனாயிருக்கிறேன் என்று. ஆனால், நண்பர்களே! பரிசுத்த ஆவியானவர் அது, இது என்று அஃறிணையில் அழைக்கப்படக் கூடியவர் அல்ல. உண்மையில், பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதைப் புரிந்து கொள்வது முக்கியம். அவருக்கு தனிப்பட்ட **குணாதிசயங்களும், அடையாளங்களும்** உண்டு. சில பேர் பரிசுத்த ஆவியானவரை **நுட்பமான ஒரு சக்தி அல்லது மர்மமான ஒரு தாக்கம் அல்லது பிதாவினிடத்திலிருந்து வெளிப்படுகிற ஒரு சாராம்சம்** என எண்ணுகின்றனர். ஆனால், இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரை எப்படிக் குறிப்பிடுகிறார் பாருங்கள்; யோவான் 16:13 –ல் '**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.** இயேசு பரிசுத்த ஆவியானவரை ஓர் நபராகப் பேசுவதை கவனியுங்கள். இயேசு '**அவர்**' என்று தனிப்பட்ட பெயர்ச்சொல்லைப் பயன்படுத்துகிறார். உண்மையில், பரிசுத்த ஆவியானவர் பற்றிய தனிப்பட்ட பண்புகளை வாசிக்கும்போது, பிதாவாகிய தேவன் போலும், இயேசுக்கிறிஸ்து போலும் அவர் **ஆளுமை உடையவர்** என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அவருக்கு **சிந்தை** இருக்கிறது [ரோமர் 8:27]. அவர் **பேசுகிறார்** [யோவான் 16:13]. அவர் **போதிக்கிறார்** [யோவான் 14:26] அவர் காரியங்களைத் **தெரிவிக்கிறார்** [அப்போஸ்தலர் 20:23] அவர் **சாட்சி கொடுக்கிறார்** [யோவான் 15:26] தனிப்பட்ட ரீதியில், அவரை **விசனப்படுத்த முடியும்** [ஏசாயா 63:10] அவரைச் **சோதிக்க** முடியும் [அப். 5:9].

சரி இப்பொழுது, நாம் இரண்டாவது கருத்தோட்டத்திற்கு போவோம்.

**2. தேவத்துவத்தில் அவர் நிலை.**

நண்பர்களே, பரிசுத்த ஆவியானவரின் நிலை தெய்வீகமுடையது. அப்போஸ்தலர் 5:3–ல், [பேதுரு அனனியாவைப் பார்த்து, 'பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன ?' என்றான். தொடர்ந்து வசனம் 4–ல், 'நீ

மனுஷனிடத்தில் அல்ல, **தேவனிடத்தில்** பொய் சொன்னாய்' என்றான் ]. வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை தேவனாக அடையாளப்படுத்துகிறது. ஆம், **அவர் தேவன்!** ஆனால், இந்த எளிமையான உண்மையையும், அநேகர், தேவத்துவத்தில் மூன்று பேர் இருக்கிறார்கள் என்பதையும்.... அவர்கள் தேவன் [பிதா], இயேசு கிறிஸ்து [குமாரன்] மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன் [தேற்றரவாளன்] என்பதையும் புரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள். தமிழ்ப் புதிய ஏற்பாட்டில் சில பகுதிகள் **தேவத்துவம்** பற்றிப் பேசுகிறது.

1] அப்போஸ்தலர் 17:29, பவுல் அங்கே மார்ஸ் மேடையில் பேசுகிறார். 'நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு **தெய்வம் [தேவத்துவம்]** ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது' என்று. புதிய கிங் ஜேம்ஸ் மொழியாக்கத்தில், தெய்வம் [தேவத்துவம்] என்பதற்குப் பதிலாக 'தெய்வீகத் தன்மை' [Divine Nature] சொல்லுகிறது.

2] பவுலடியார் ரோமபுரி சபையாருக்கு இப்படியாக எழுதியுள்ளார். எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை **தேவத்துவம்** என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே உலகம் உண்டானது முதற்கொண்டு, தெளிவாய் காணப்படும். **அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை** என்று [ரோமர் 1 :20].

3] ஏனென்றால், **தேவத்துவத்தின்** பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது என்று பவுல் கொலோசெயருக்குக் கூறுகிறார் [ கொலோ 2:9].

4] மத்தேயு 28 :19 ல் இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசுகிறார் [பிரதான கட்டளை சம்பந்தமாக] 'ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி **பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே** ஞானஸ்நானம் கொடுத்து... என்று.' இங்கே இயேசு தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களின் பெயரையும் **பிதா, குமாரன், பரிசுத்த** ஆவி என்று குறிப்பிடுகிறார்.

5] 2 கொரி. 13:14, 'கர்த்தராகிய **இயேசுக் கிறிஸ்துவினுடைய** கிருபையும், **தேவ னுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய** ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்.' தேவத்துவத்தின் உள்ள மூவரும் 'தேவத்துவத்தின்' நபர்களாகவே குறிப்பிடப்படுகின்றனர். ஒவ்வொருவரும், அதாவது **தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகத்தன்மை கொண்ட வர்கள். ஒரே ஒரு தெய்வீகத் தன்மை** [தேவன்]. ஆனால், **மூன்று தனித்துவமான ஆளுமைகள்.** இப்பொழுது பரிசுத்த ஆவியானவரைப் புரிந்து கொள்வதற்கு இது முக்கியமானது. ஏனெனில், சிலபேர், பரிசுத்த ஆவியானவர் ஒரு நுட்பமான சக்தி, மர்மமான ஒரு தாக்கம், அல்லது

பிதாவினிடத்திலிருந்து வெளிப்படும் ஒரு சாராம்சம் என்று எண்ணுகின்றனர். இது முழுமையாகத் தவறானது. அவர் தெய்வீகள்ளவர்.

**3. தேவத்துவத்தில் அவர் வேலை (செயல்பாடு)**

தேவத்துவத்துள் எப்படி மூன்று தனித்துவமான ஆளுமைகள்/ஆள்தத்துவம் இருப்பதுபோல தேவத்துவத்துள் மூன்று தனித்துவமான செயல்பாடுகளும் உண்டு. தேவத்துவத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவரவருக்கான வேலையும், நடப்பிக்க வேண்டிய செயல்பாடும் உண்டு. அவர்கள் **மூவரின் வேலையும், தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பூரணமாக ஒன்றிணைகிறது.**

இப்பொழுது நம்முடைய பாடம், பரிசுத்த ஆவியானவர் பற்றி இருப்பதால் என்னோடு சேர்ந்து படைப்பின் நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு பற்றிக் கவனிக்க வேண்டுகிறேன்.

**முதலாவது, படைப்பின் போது பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு.**

நண்பர்களே, தேவத்துவத்தின் **மூவருமே** உலகப் படைப்பில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் **வித்தியாசமான வேலைகள்** இருந்தது. இப்பொழுது, முதலாவது, நாம் படைப்பில் தேவத்துவத்தின் மூன்று பேரும் ஈடுபட்டிருந்தார்கள் என்கிற உண்மையை நிலை நிறுத்துவோம். ஆதியாகமம் 1:1 சொல்லுகிறது, 'ஆதியிலே **தேவன்** வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்' என்று. இந்த வசனத்தில் தேவன் என்பதற்கான மூல வார்த்தை **ஏலோஹீம்** என்பது. இந்த வார்த்தை இடம் பெற்றிருக்கும் வேத பகுதியைப் பொறுத்து **இது ஒருமையாகவோ அல்லது பன்மையாகவோ இருக்க முடியும்.** தொடர்ந்து வாசித்தால், **தேவ ஆவியானவர்** ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்' என்றும், இன்னும் தொடர்ந்து வாசித்தால் வசனம் 26-ல், 'பின்பு தேவன்: **நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும்** மனுஷனை உண்டாக்குவோமாக' என்றுள்ளது. ஆக, இங்கே உள்ள '**நமது, உண்டாக்குவோமாக** போன்ற வார்த்தைகள், உலகப் படைப்பின் போது தேவன் தனிமையாயில்லை என்று சொல்லுகிறது. இவ்வுண்மை மேலும், அப்போஸ்தலன் யோவானால், யோவான் 1:1-ல், உறுதிப்படுத்தப் படுகிறது. **ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது** என்று யோவான் கூறியுள்ளார். வசனம் 2, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். வசனம் 3, சகலமும் **அவர் மூலமாய்** உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

சரி இங்கே, நாம் படைப்பில் **பிதாவின் பங்கு** என்ன என்பதை தெரிந்து கொள்ள ஆரம்பிப்போம்.

1) **பிதாவாகிய தேவன் வடிவமைப்பாளராக / திட்டமிடுகிறவராக இருந்தார்.**

படைப்பின் **ஒழுங்கையும்,** அதன் **அளவையும்** தேவன் தீர்மானித்தார். ஆனால், கிறிஸ்து (வார்த்தை) தான் தேவன் தீர்மானித்ததை **நிறைவேற்றினார்.** நாம் தொடர்ந்து தேவத்துவத்தின் உள்ள மற்ற இருவரின் செயல்பாடுகளைக் காணும்போது, மேலும், இது உறுதியாக்கப்படும். பிதாவாகிய தேவன் வடிவமைப்பாளர். இது தேவனுடைய திட்டம். அப்படியானால் கிறிஸ்துவின் செயல்பாடு என்ன?

2) **இயேசு நிறைவேற்றுகிறவராயிருந்தார்.**

நாம் இப்பொழுதுதான் கவனித்தோம், 'சகலமும் **அவர் மூலமாய்** உண்டாயிற்று.... உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை' என்று. இங்கே பாருங்கள், இதே கருத்து கொலோ 1:15–17 –ல் உள்ளது. '**அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்**' என்று **வசனம் 16, 'அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது** என்று பார்க்கிறோம். எபிரெயர் ஆசிரியர் இவ்விதமாக கூறுகிறார், 'பூர்வ காலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் **குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;** இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்' (எபி 1: 2). ஆக, தேவன் வடிவமைப்பாளர் (Designer), கிறிஸ்து நிறைவேற்றுகிறவர் (Executor). அப்படியானால் மூன்றாமவர்....

3) **பரிசுத்த ஆவியானவர் முடிக்கிறவர் அல்லது முழுமைப்படுத்துகிறவர்... அழகுபடுத்துபவர்.**

பூமி படைக்கப்பட்டதற்குப் பிறகு, வேதாகமம் சொல்லுகிறது, '**ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிருந்தது.** ஆழத்தின் மேல் இருள் இருந்தது; தேவ **ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.** பிறகு தேவன் சொன்னார், 'வெளிச்சம் உண்டாகக்கடவது என்று. வெளிச்சம் உண்டாயிற்று'. பரிசுத்த ஆவி யானவரின் வேலை இங்கே ஆரம்பமாயிற்று. பரிசுத்த ஆவியானவர் ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கை உண்டு பண்ணினார்... அவர் முடிக்கிறவர், முழுமைப்படுத்துகிறவர். யோபு இப்படியாகச் சொல்லு கிறார், யோபு 26:13, '**தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்**' என்று. சங்கீதம் 104:30, 'நீர் உம்முடைய **ஆவியை அனுப்பும் போது,** அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்' ஆக, படைப்பில் **தேவன்** சிருஷ்டிப்பின் ஒழுங்கை வடிவமைப்பவர் / திட்டமிடுபவர். 2) **கிறிஸ்து** (வார்த்தை) தேவனுடைய வடிவமைப்பை / திட்டத்தை **நிறைவேற்றுகிறவர்.** 3) மற்றும் பரிசுத்த ஆவியானவர் படைக்கப்பட்டவைகளை முடித்து **வைப்பவர்... அழகு படுத்துபவர்.**

சரி, அடுத்த கருத்தோட்டத்திற்கு நாம் நகரும் முன்பாக, தேவத்துவத்தின் பண்புகளில் ஒன்று **ஒழுங்கும், கிரமமும்** என்பதை நாம் அறிந்து கொள்வது நல்லது. தேவன் எப்போதும் முறையான செயல்பாடுடையவராக இருக்கிறார் என்றும், அப்படி இருப்பதை வேத விற்பன்னர்கள் '**தெய்வீக பொருளாட்சி**' என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்த உலகப் படைப்பில், தேவத்துவத்திலுள்ள ஒவ்வொருவரும் குறிப்பிட்ட செயல்பாட்டைக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இப்பொழுது அக்கருத்தோடு, இதையும் நாம் சேர்த்துக் கொள்வோம் – தேவத்துவத்திலுள்ள ஒவ்வொருவரும் நற்செய்தியின் மீட்பின் திட்டத்தில் **தங்களுக்கென்று** சொந்தச் செயல்பாடு கொண்டிருந்துள்ளனர். மீட்பின் திட்டத்தைக் குறிப்பிடும்போது ஒருவர் இவ்விதம் சொன்னார். **பிதா உருவாக்கினார்** (Wrought it), குமாரன் வாங்கினார் (Bought it) பரிசுத்த ஆவியானவர் போதித்தார்(Taught it)– என்று (Wrought). உருவாக்குவது என்பது தொன்மையான வார்த்தை. இதன் பொருள் **கிரியை செய்தார்** அல்லது **ஆயத்தம் செய்தார்** என்பது. நாம் தற்கால ஆங்கில வார்த்தையை இங்கே பயன்படுத்த விரும்பினால், அதுவும் எதுகை, மோனையோடு வரவேண்டுமானால், பிதா நினைத்தார் (Thought it) என்று சொல்ல முடியும். இங்கே நாம் சொல்ல வருவது, மனிதனுக்கான மீட்பு பிதாவின் திட்டம். அவர்தான் படைப்பின் வடிவமைப்பாளர். யோவான் 3:16, கவனியுங்கள் **அவரைத் தந்தருளி** இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். ஆம், மீட்பின் திட்டமானது தேவனுடைய மனதில் உருப்பெற்றுள்ளது. இன்னும், பிதாவாகிய தேவன் பற்றி ஏசாயா 53:11–ல், **சிலுவையில் அவர் கிறிஸ்துவின் தியாகத்தைக் கண்டார் என்பதை, அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது சுவாரசியமான ஒன்றாக உள்ளது. இது சொல்லும் உட்பொருள், இந்த மீட்பின் திட்டத்தை **வடிவமைத்தவர்** தேவன் தான் என்பது. தேவனுடைய திட்டமும், வடிவமைப்பும், மனுக்குலம் பாவத்திலிருந்து மன்னிப்படைந்து நீதிமானாக்கப்படுவதற்கான ஒரு முறையைக் கொண்டு வரும் படியாகவும் இருந்தது.... அந்தத் திட்டம் ஒரு **பரிபூரண பலி** செலுத்தப்படுவதை உள்ளடக்கியிருந்தது.

சரி இப்போது, குமாரனுடைய பங்கு எது?

**இயேசு கிறிஸ்து அதை வாங்கிக் கொண்டார்:**

இயேசு தேவ திட்டத்தை நிறைவேற்றுகிறவராயிருந்தார். தேவனுடைய மனதில் உருப்பெற்ற **தியாக பலியாக இயேசு வந்தார்.** அவர் அதைத் தமது இரத்தத்தினால் வாங்கினார்... அதாவது, பாவ மீட்புக்கான வழியை இரத்தத்தின் மூலம் கொடுத்தார். எபி. 2:9 '**ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்**' என்று சொல்லுகிறது. வெளிப்படுத்தல் 5:9 **இரத்தத்தினாலே மீட்டுக்**

**கொண்டார்**' என்கிறது. எபே. 3:9– 11 நற்செய்தி குறித்து பேசும்போது தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த **அநாதி தீர்மானத்தின்படியே,** உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக என்றுள்ளது. இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லா வற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று. எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' என்று. இவ்வசனம் இது **பிதாவின் திட்டம்** என்று நமக்குச் சொல்கிறது.... தேவ ஞானமானது சபையின் மூலமாய்த் தெரிகிறது... அதைக் கிறிஸ்துவின் மூலம் நிறை வேற்றியிருக்கிறார். தேவத் திட்டத்தைக் கிறிஸ்து நிறைவேறுகிற வராய் இருந்தார்.

சரி, இப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் பங்கு என்ன?

**3. பரிசுத்த ஆவியானவர் அதை போதித்தார்** -

பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறவர்– முடிக்கிறவர். முழுமையடையச் செய்கிறவர். இதன் மூலம் நாம் என்ன பொருள் கொள்கிறோம்? மனிதனை மீட்கும்படியாகக் கிறிஸ்து மரித்திருந்த போதிலும், **இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருந்தது.** ஆகவே, இயேசு மரிப்பதற்கு முன்பாகத் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் யோவான் 14:6–ல், 'நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது **என்றென்றைக்கும் உங்களோடு கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.** என்றும், வசனம் 26 –ல், 'என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற **பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே** எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு **நினைப்பூட்டுவார்**' என்றுள்ளது. ஆகா, பிதா உருவாக்கினார் (wrought) குமாரன் வாங்கினார் (Brought) பரிசுத்த ஆவியானவர் போதித்தார் (Taught).

நண்பர்களே, பரிசுத்த ஆவியானவரின் பிரதான வேலை வேதாகமத்தை நமக்குக் கொடுப்பது. நம்முடைய பக்தி வாழ்வில் நாம் பின்பற்றுவதற்கான மாதிரியை நமக்குப் போதிப்பது. மறுபடியுமாக, இயேசு தம்முடைய சீடர்களிடம், '**அவர் உங்களுக்கு எல்லா வற்றையும் போதிப்பார்' என்று சொன்னார்.** 2 பேதுரு 1:21, 'தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள், **பரிசுத்த ஆவியினாலே** ஏவப்பட்டுப் பேசினார்கள்' ஆக, பரிசுத்த **ஆவி யானவர் வெளிப்படுத்துகிறவர், தெய்வீக மாதிரியைக்**

**கொடுப்பவர் அவர்தான்.** அவர் அற்புதவிதமாக மனிதர்களை **சகல சத்தியத்துக்குள்ளாக** வழிநடத்தினார். அவர் மனிதர்களை புதிய ஏற்பாட்டை எழுதும்படி ஏவி வழி நடத்தினார். அவர்தான் தெய்வீக மாதிரியைக் கொடுத்தார். அத்தோடு, பூரணமான / முழுமையான வார்த்தை வெளிப்பாடு நிறைவடையும்வரை என்ன செய்ய வேண்டுமென்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும்படியாய் அற்புதமான **வெளிப்பாட்டை வழங்கினார்.** அதன்பின், புதிய ஏற்பாடு நிறைவடைந்த பிறகு, பரிசுத்த ஆவியானவர் அற்புத வெளிப் பாட்டையும், அற்புதங்களையும் **நின்றுபோகச் செய்தார்** [கொரி. 13:8-13]. தேவனுடைய ஞானமானது, பரிசுத்த ஆவியானவருடைய செயல்பாட்டிலும், வேத வசனங்களை வெளிப்படுத்திய விதத்திலும் அழகாக விவரிக்கப்பட்டிருப்பதை நாம் அறிகிறோம்.

**பிதாவானவர்** ஆரம்பிப்பவராக, படைப்பவராக, திட்டத்தை வடிவமைப்பவராகச் செயல்பட்டுள்ளார். **குமாரன்** நிறைவேற்று பவராகச் செயல்பட்டுள்ளார். **பரிசுத்த ஆவியானவர்** முடிக்கிறவராகச் செயல்பட்டுள்ளார். ஆவியானவருடைய வேலை சத்தியத்தை ஆரம்பிப்பது அல்ல, மாறாக, சத்தியத்தைத் **தொடர்பு படுத்துவது.** இயேசு, ஆவியானவர் **சுயமாய்ப் பேச மாட்டார்** என்று சொன்னார். 'தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்' என்று. ஆக, இன்றைக்கு ஆவியானவர் வசனம் என்னும் கருவியின் மூலமாகவே செயல் படுகிறார். ஆகவே தான், எபேசியர் 6:17, 'தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறது.

**முடிவுரை**

பரிசுத்த ஆவியானவர் யார் ? அவர் **தெய்வீகமுடையவர்.** அவர் தேவத்துவத்தில் ஒருவர். அவருடைய வேலை / பங்கு என்ன ? **அவர் தேவச் செய்தியை வெளிப்படுத்துபவர். பிதா திட்டத்தை. வடிவமைத்தார். குமாரன் நிறைவேற்றினார், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினார்.** தீத்து 3:5 சொல்லுகிறது, தேவன் 'மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்கு தலினாலும் இரட்சித்தார்' என்று. நாம் இங்கே தேவத்துவத்திலுள்ள ஒவ்வொருவரின் செயல்பாட்டையும் இந்த வசனத்தோடு பொருத்திப் பார்ப்போம். முதலாவது, பிதாவானவரால் இரட்சிக்கப்படுகிறோம். ஏனெனில், அது அவருடைய திட்டம். இரண்டாவது, தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக் கொண்டு மறு ஜென்ம முழுக்கினால் கழுவப்படுகிறோம். மூன்றாவது, பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ள சத்தியத்தின் செய்தியோடு நாம் இசைந்து போகும்போது புதிதாக்கப்படுகிறோம்!

**தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!!**

**அனைவருக்கும் எங்கள்**

**புத்தாண்டு [2024] வாழ்த்துக்கள்!!! ஊழியத்தின் சார்பாக** ✝

# ஆராதனையின் மாதிரி

**J.C. சோட்**

இன்றைய மத உலகில் பல வகையான ஆராதனை முறைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். கத்தோலிக்கர்கள் தங்களுக்கே உரித்தான தனி வழியில் ஆராதிக்கின்றனர். புராட்டஸ்டண்ட் சபைகள் வெவ்வேறு வகையான ஆராதனை முறைகளைப் பின்பற்றுகின்றன. அதாவது, வித்தியாசப்பட்ட ஆராதனை முறைகள் அனைத்தையும் நீங்கள் காண விரும்பினால், வாரக்கணக்கில் பல இடங்களுக்கும் சுற்றி வரலாம். ஏன் இந்த நிலை? இப்படி இருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்பினாரா?

ஒரே ஒரு சபை தான் இருக்கிறது; அது கர்த்தருக்கே சொந்தமானது என்று வேதாகமம் கற்பிக்கிறது. (எபே. 4:4: மத். 16:18). சபையின் மாதிரி புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இது உண்மையாக இருக்கும் வேளையில், நாம் ஆராதனை செய்ய கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய சபையாக, அதுவே இருக்கும்போது, ஆராதனையும் ஒரே மாதிரியாகத்தானே இருக்க வேண்டும்.

தம்மை மக்கள் இன்று எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார் என்பதை அறிய நாம் புதிய ஏற்பாட்டுக்குத்தான் செல்லவேண்டும். இதை அறிய வேறு வழி எதுவும் இல்லை. ஆராதனையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அங்கேதான் நாம் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது. கீழ்க்கண்டவற்றை அது வெளிப்படுத்துகிறது.

**1. தேவன் ஒருவரே ஆராதிக்கத்தக்கவர்**

'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக.' என பிசாசால் சோதிக்கப்படுகையில் கிறிஸ்து கூறினார். (மத்தேயு 4:10).

**2. வாரத்தின் முதல்நாள்தான் ஆராதனை நாளாக இருக்கவேண்டும்.**

வாரத்தின் முதல் நாள்தோறும் சீடர்கள் தங்கள் வரவுக்குத்தக்கதாக சேர்த்து வைத்து, கூடிவரக் கேட்டுக் கொள்ளப் பட்டனர் : 'நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் தல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்'. (1 கொரி. 16:2).

**3. கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.**

இதற்கு நமக்கு மூன்று காரணங்கள் உள்ளன : 'அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'. [அப். 2:42]. 'வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீடர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.' [அப். 20:7].

**4. நாம் எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென்று நமக்கு கூறப்பட்டுள்ளது :**

கிறிஸ்து கூறும்போது, 'உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது ; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்.' [யோவான் 4:23,24].

**5. ஆராதனையின் ஐந்து செயல்களும் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது :**

அவைகள் : வேதாகமப் போதனை [2தீமோத்தேயு 2:15]; ஜெபம் [அப். 2:42]; பாடல் [எபே 5:19] கர்த்தரின் பந்தி [மத்தேயு 26 : 26–28]; கொடுத்தல் [2கொரி. 9:6, 7]. புதிய ஏற்பாட்டில் நாம் காணும் ஆராதனை முறைகள் இவை மட்டுமே. எனவே, நாம் இவைகளை மட்டுமே ஆராதனையில் கடைப்பிடிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**6. ஆராதனையில் கூடி வருவதில் தவறாதிருக்க நாம் அறிவுறுத்தப்படுகிறோம் :**

'சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாம் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும் என எபிரேய எழுத்தர் கூறினார். [எபி 10:25]

**7. ஆராதனை முறை எளிமையனதும், தேவையானதை மாத்திரம் கொண்டதுமாக உள்ளது**

ஆராதனையில் பங்கு பெறுவது யாருக்கும் கடினமானதல்ல. அவசியமற்ற சடங்குகள் எதுவும் இல்லை. மாறாக, சகலரும் கலந்து கொள்ள எளிய முறைகளே உள்ளன. சகலரும் அழைக்கப் படுகின்றனர்.

**8. ஆராதனை நிகழ்ச்சி முழுவதும் கர்த்தருடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது :**

தேவனுடைய வாக்கியங்களின்படி மட்டுமே நாம் பேசுகிறோம். [1 பேதுரு 4:11]. 'கர்த்தர் இவ்வாறாக கூறுகிறார்' என்பதற்கு மாறாக எதுவும் செய்யப்படுவதில்லை.

புதிய ஏற்பாட்டு ஆராதனை மாதிரியைப் பின்பற்றுவதில், கிறிஸ்துவின் சபை சிறப்புத்தன்மை பெற்றது. எனவே, மற்ற குழுக்களில் உள்ள சில காரியங்கள் எங்கள் ஆராதனையில் இடம் பெறுவதில்லை. உதாரணமாக, கீழ்க்கண்டவைகள் எங்கள் ஆராதனையில் கிடையாது.

1. நாங்கள் இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்து வதில்லை. தேவனைப் புகழ்ந்து பாடவேண்டுமென புதிய ஏற்பாடு தெளிவாகக் கற்பிக்கிறது. 'சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி' என பவுல் கூறுகிறார். [எபே. 5:19] பாடல் பற்றிய பாடத்தில் இது பற்றி மேலும் கூறுவோம்.

2. கர்த்தரின் பந்தியை நாங்கள் இரகசியமாக அனுசரிப்பதில்லை. மாறாக, 'எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்' என பவுல் கொரிந்தியருக்கு [1 கொரி. 11:28] எழுதியிருப்பதால், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள தடை விதிப்பதில்லை.

3. தசமபாகம் என்பதை நாங்கள் பின்பற்றுவதில்லை. அவரவர், தங்கள் வருமானத்திற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டும் என பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதினார் [I கொரி. 16:2].

4. கர்த்தரின் நாளைத்தவிர மற்ற நாட்களில் காணிக்கை வாங்கு வதில்லை. வாரத்தின் முதல் நாளாக இருப்பினும் இல்லாவிட்டாலும், தாங்கள் கூடும் நேரங்களில் எல்லாம் பல குழுக்கள் காணிக்கை வசூலிக்கின்றனர். ஆனால், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கொடுக்கக் கட்டளையிடப்பட்டுள்ளனர். [1 கொரி. 16:2]. ✝

பெண்கள் பகுதி

# கீழ்ப்படியாமை

Sis. ரேச்சல் ராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வருடத்தின் இறுதியில் நின்று கொண்டிருக்கும் நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்து எதையாவது கற்றுக்கொள்ள வேண்டும்.

'கீழ்ப்படிதல்' என்பது தேவனுக்குப் பிரியமான வார்த்தை. தான் சொன்னதை தன்னால் படைக்கப்பட்ட மனுக்குலம் அப்படியே செவி கொடுத்துச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதாவது, கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்க்கிறார். வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள ஒரு சிறிய சம்பவம் மூலம் இந்த கீழ்ப்படியாமைக்கு விளக்கங்களைப் பார்க்கலாம்.

சோதோம், கொமோராவின் அக்கிரமத்தினிமித்தம் தேவன் அந்தப் பட்டணங்களை அழிக்கத் திட்டமிட்டார். அங்கிருந்த நீதிமானாகிய லோத்தையும், அவன் மனைவி, பிள்ளைகளையும் தேவன் தப்புவிக்க நினைத்து, 'அவர்களை வெளியே கொண்டுபோய் விட்ட பின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்' [ஆதி. 19:17]. ஆனால், அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள் [ஆதி 19:26]. இது நம் அனைவருக்கும் மிக, மிகத் தெரிந்த சம்பவம். இதைப் படிக்கும்போது நமக்கு ஒரு பய உணர்வு, குழப்பம், நம்புவதற்கு சற்று சிரமம் என்றெல்லாம் இருந்தாலும், எல்லாவற்றிற்கும் புரியும்படியாக, உண்மையாக, அதிகாரப்பூர்வமாக நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பதில் சொல்லிவிட்டார். தன் சீஷர்களுடனே பேசிக்கொண்டிருக்கும் ஒரு சமயத்தில், 'லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்' [லூக்.17:32] என்றார். இங்கு அவள் செய்தது 'கீழ்ப்படியாமை' என்ற பாவம், தெய்வீகமான ஆலோசனையை மீறும் போது அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாயிருக்கும் என்பதை தலைமுறை, தலைமுறைக்கும் கற்றுக் கொடுக்கும்படியாகவும், எச்சரிப்பாகவும் இச்சம்பவம் இருக்கிறது. ஏன் தேவனுக்குக் கீழ்ப்படிதல் தேவைப்படுகிறது? எது கீழ்ப்படிய வைக்கிறது? எது நம்மை கீழ்ப்படியாமல் இருக்க வைக்கிறது? சில உதாரணங்கள் மூலம், வேத வசனங்கள் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம்.

**1. ஏன் தேவன் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார்?**

நம்முடைய 'நன்மைக்காக' அவர் கீழ்ப்படிதலை வலியுறுத்துகிறார். தேவன் தமது சாயலில்,நன்மை, தீமை அறியத்தக்க விதத்தில் நம்மை சிருஷ்டித்தார். நன்மையைப் பொழியக் காத்திருக்கும் நம் சிருஷ்டிகளின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் போது அனைத்தும் நலமுடன் இருக்கும். உதாரணமாக, தேவன் மீனை சிருஷ்டித்து தண்ணீரையும் உண்டாக்கி, மீனுக்குத் தண்ணீர் என்ற சாம்ராஜியத்திற்குள் வாழும்படியாக செய்தார். தேவனால் ஈவாகப் பெற்ற அந்த வட்டத்திற்குள் வாழும்போது, அவைகள் பலுகிப் பெருகி வாழ்கின்றன. வெளியே வந்தால் மாண்டு போகிறது.

இப்படித்தான் மனிதன் தேவ ஒழுக்கம், சட்டம் இவைகளுக்கு வெளியே வரும்போது அவனுக்கு வலி, மகிழ்ச்சியின்மை, ஆவிக்குரிய மரணம் நேரிடுகிறது.

**2. பரலோகத்திற்கு ஆயத்தமாவதற்கு கீழ்ப்படிதல் தேவைப்படுகிறது:**

ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரை சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக் குள்ளே வாசமாயிருப்பார் (வெளி. 7:15). எவர்கள்? 14ம் வசனத்தில் இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது சாத்தானை சேவிக்க ஆரம்பித்து விடுவோம். சாத்தானுக்கு ஊழியம் செய்து விட்டு பரலோகத்தை சுதந்தரிக்கவே முடியாது. ஏனென்றால், சாத்தானை பின்பற்றினவர்களின் முடிவு நரகம்.

**3. கீழ்ப்படிதல் என்பது கற்றுக் கொள்ளப்படும் ஒன்று:**

மனிதனுக்கு எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவைகள் ஒழுங்குபடுத்தப்படுவதும், கட்டுப்பாட்டுக்குள் வைத்தி ருப்பதும் அவசியம். கிறிஸ்துவே கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டார் (எபி. 5:8) எவ்வாறு ? 'அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு' என்று வாசிக்கிறோம். தேவன் மனிதனுக்கு கீழ்ப்படிதலை கற்றுக் கொடுப்பதற்கு மிகக் கடுமையான வழிகளைக் கையாளுகிறார். ஏனென்றால், கீழ்ப்படிதல் என்ற பாடம் அவ்வளவு முக்கியமானது. கீழ்ப்படிதலுக்கு உயர்ந்த, சிறந்த பரிசும், கீழ்ப்படியாமைக்கு கடுமையான விளைவுகளையும் கொடுத்து அதன்

முக்கியத்துவத்தை விளங்கப் பண்ணுகிறார். கீழ்ப்படிதல் என்பது பரலோகத்திலேயே கற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. எப்படியென்றால், பாவஞ்செய்த தூதர்களை அவர் அங்கே விட்டு வைக்கவில்லை. நோவா காலம், சோதோம் கொமோரா நாட்களில் பாவத்தை அவர் விட்டு வைக்கவில்லை. காணாதவர் போல் இருக்கவில்லை.

**4. கீழ்ப்படியாமைக்கு காரணங்கள்:**

தேவனுடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் அறியாதது ஒரு காரணம். கீழ்ப்படியாமைக்கு மற்றுமொரு காரணம் கலக இருதயம். தனக்குப் பிடிக்கவில்லையென்றால் ஏற்றுக் கொள்ள மாட்டான். மனசாட்சியை பின்பற்றுவது சிலரைக் கீழ்ப்படியாமல் போக வைக்கிறது. உலக சிநேகம் ஒருவனை கீழ்ப்படியாமல் செய்வதற்கு முக்கிய காரணமாகி விடுகிறது. லோத்தின் மனைவி பின்னிட்டு பார்த்தாள் என்றால் அவள் இருதயம் இன்னும் சோதோமிலேயே இருந்தது. இருதயம் பின்னிட்டுப் பார்க்குமானால் தேவனோடு முன்னேற முடியாது.

தவறான தலைவர்களைப் பின்பற்றும் போது கீழ்ப்படியாமல் போகச் செய்து விடுகிறது.

இருவரும் சேற்றில் தான் விழவேண்டும் (மத். 15:14), கோழைத்தனம் கீழ்ப்படியாமல் போக வைத்து விடுகிறது. ஜனங்களை எதிர்க்க தைரியமில்லாத பிலாத்து இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்து விட்டான். நாளை, நாளை என்று தள்ளிப் போடுதல் நம்மைக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாக்கி விடுகிறது (எபி. 3:7,8).

அருமையான சகோதரிகளே! நாம் எந்த ரகம்? ! யோசிப்போம். வருடத்தின் கடைசியில் இருக்கும் நாம் வருடங்களை கூட்டிக் கொடுப்பவருக்கு கீழ்ப்படியாமல் இருப்பது எப்படி நியாயம் ? சிந்திப்போம். கீழ்ப்படிவோம். ஆமென்!!

**அன்புச் சகோதரிகள் மற்றும் வாசகர்கள்**
**அனைவருக்கும் எங்கள் ஊழியத்தின்**
**சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்கள்**

✝

வாலிபர் பகுதி

# பெயரும், மறுபெயரும் - (2)

Dr. **ஏபில் நாயகம்**

பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் இறுதி மாதத்தில் இந்த இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வருடம் முழுவதும் தேவன் நம் ஒவ்வொருவரையும் கண்ணின் மணியைப் போல பாதுகாத்து வந்திருக்கிறார். அவருடைய அன்பிற்கும், தயவிற்கும் நாம் எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். எப்படியாக தேவன் இந்த வருடத்தை நீங்கள் கடக்கக் கிருபை செய்தாரோ அதுபோலவே வருகின்ற புதிய ஆண் டிலும் உங்களுக்கு துணை நிற்க நான் ஜெபித்துக் கொள்கிறேன்.

கடந்த மாதம் பெயரும், மறுபெயரும் என்ற தலைப்பிலே காரியங் களை பார்த்து, பழைய ஏற்பாட்டிலே பெயர் மாற்றம் செய்யப்பட்ட நபர்களை நாம் கவனித்தோம். ஆபிரகாம் காலம் தொடங்கி தானியலின் நாட்கள் வரைக்கும் பெயர் மாற்றம் யாருக்கெல்லாம் இருந்தது என்பதை கவனித்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த மாதம் புதிய ஏற்பாட்டிலே அப்படிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கும் நபர்களை நாம் கவனித்து நாம் ஆரம்பித்த பாடத்தை முடிக்கலாம்.

இயேசு கிறிஸ்துவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த சீடர் மூவருள் முக்கியமானவராக விளங்குபவர் பேதுரு. யோவான் ஸ்நானகனின் சொல்லைக் கேட்டு இயேசுவிற்குப் பின்னாக வந்த அந்திரேயா, தன் சகோதரனாகிய சீமோனிடம் சென்று ‘ மேசியாவை கண்டோம்‘ என்று சொன்னான். சொன்னதோடு மட்டுமல்லாமல் தன் சகோதரனாகிய சீமோனை இயேசுவிடம் அழைத்தும் வந்தான். அப்பொழுது இயேசு அந்திரேயாவின் சகோதரனாகிய சீமோனை பார்த்து, **யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ கேபா எனப்படுவாய்** என்றார். கேபா என்பதற்கு பேதுரு என்று அர்த்தமாம். இந்தப் **பெயர் மாற்றம்** இயேசு கிறிஸ்துவால் வழங்கப்பட்டது. அது மட்டுமல்ல, இந்த பெயர் மாற்றத் தின் விளைவு எவ்வளவு பெரியது என்பதை நம் ஒவ்வொருவரும் அறிவோம். மத்தேயு 16:18 இல், **மேலும் நான் உனக்குச் சொல்லு கிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையை கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற் கொள்வதில்லை**‘ என்று இயேசு முன்னுரைத்ததை வாசிக்கிறோம். பெந்தேககோஸ்தே நாளிலே ராஜ்யமாகிய சபை பேதுரு மூலம் ஆரம்பி க்கப்படப் போகிறது என்பதை அறிந்திருந்த இயேசு கிறிஸ்துவானவர், சீமோனை பார்த்த மாத்திரத்திலேயே அந்தப் பெயர் மாற்றத்தை கொடுத்தார். இந்த பெயர் மாற்றம் வெறும் பெயரளவிலே மாற்றமாக இல்லாமல் தேவனுடைய ராஜ்ஜியத்தின் பிறப்பை உறுதிப்படுத்தும் வகையிலே ஒரு சிறப்பான நிலையைப் பெற்றிருந்தது.

அடுத்ததாக, பிரியமானவர்களே! இந்த வரிசையில் நாம் பார்க்க இருப்பது சவுலாக, இருந்த அப்போஸ்தலமாகிய **பவுல்.** சபை ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மும்முரமாக செயல்பட்ட ஒருவர் தான் சவுல். வீடுகள் தோறும் நுழைந்து புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய் காவலில் வைத்து சீசரை பயறுத்தி கொலை செய்யும்படி திட்டம் போட்டு இப்படியாக சபையைப் பாழாக்கி கொண்டிருந்தான். இப்படிப்பட்ட ஒரு நபர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் சந்திக்கப்பட்டு அவர் துன்பப்படுத்தின அதே இயேசுவை ஆண்டவர் என்றும், தேவனுடைய குமாரன் என்றும், அவராலே அல்லாமல் மீட்பு இல்லை என்றும் திருஷ்டாந்தமாக பிரசங்கிக்கும் ஒரு நபராக மாறினார்.

கிறிஸ்துவை சந்தித்த சவுல், பவுலாக மாறினார். இந்தப் பெயர் மாற்றம் யாராலே கொடுக்கப்பட்டது என்று நமக்குச் சொல்லப்பட வில்லை. (அப் 13:9) ஆனால், இந்தப் பெயர் மாற்றத்துக்கு முன்பும் அதற்கு பின்பும் இருந்த மனிதருக்கு இருக்கும் மாற்றத்தை நாம் கவனித்தோமானால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். இயேசுவுக்கு விரோதமாக இவ்வளவு வைராக்கியமாக ஒருவராலும் இருந்திருக்க முடியாது. அதே வேளையில், இயேசுவுக்காக இவரைப்போல ஒருவராலும் பக்தி வைராக்கியமாக இருக்க முடியாது என்று எண்ணும் அளவிற்கு ஒரு வித்தியாசத்தை நம்மால் உணர முடியும். ஆக, இந்தப் பெயர் மாற்றம் பெயரளவிலே மட்டும் மாற்றமாக இல்லாமல் தன்னுடைய நிலையிலேயே ஓர் உயர்வையும், விசுவாசத்திலே உறுதியையும் இந்த நபருக்குக் கொடுத்து இருக்கிறது.

பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி எங்கெல்லாம் பெயர் மாற்றம் இருந்ததாக நாம் பார்க்கிறோமா அங்கெல்லாம் மாற்றம் பெயரளவிலே மட்டும் இல்லாமல் **நிலையிலே ஓர் உயர்வும்** சிறப்பான அந்தஸ்தும் வந்திருப்பதை நாம் கவனிக்கிறோம். இந்த தலைப்பை தெரிந்து கொண்டதற்கான காரணம் என்ன என்பதை இப்பொழுது நாம் பார்க்கலாம். பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை, விசுவாசித்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்தானம் பெற்ற ஜனங்கள் எல்லாரும் தேவனாலே சபையில் சேர்க்கப்பட்டு வந்தார்கள் என்று நாம் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அப்படி சபையிலே சேர்க்கப்பட்ட வந்த ஜனங்களுக்கு ஒரு புதிய நாமம் தேவனால் கொடுக்கப்பட்டது. அது என்ன நாமம் என்று நான் கவனிப்போமாகில் அப்போஸ்தலர் 11வது அதிகாரம் 26 ஆவது வசனத்தில் முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கிற்று என்று நாம் வாசிக்கிறோம். ஒரு பெயர் மாற்றம் புதிய நாமம். யூத மார்க்கத்தான், புறஜாதியான் என்ற வேறுபாடு எல்லாம் இல்லாமல் தேவனுடைய குமாரனை ஏற்றுக் கொண்ட எல்லாரும் ஒரே நாமத்தினாலே அழைக்கப்பட வேண்டுமென்று கிறிஸ்தவர்கள் என்ற நாமம் கொடுக்கப்பட்டது.

பிரியமானவர்களே, முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், இந்தப் பெயரை முதன்முதலாக பெற்றுக் கொண்ட பொழுது அவர்கள் எப்படி உணர்ந்து இருப்பார்கள் என்று தெரியவில்லை. ஆனால், ஒரு புதிய நாமம் கொடுக்கப்படும் பொழுது நிச்சயமாகவே அவர்களுக் குள்ளாக ஒரு சந்தோஷம் இருந்திருக்கும். ஒரு உத்வேகம் இருந்திருக்கும். தேவனுக்காக வாழ வேண்டும் என்ற வைராக்கியம் இருந்திருக்கும். எப்படியாக இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொண்டு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்தானம் பெற்றுக் கொண்ட அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற நாமம் வழங்கப்பட்டது அது நமக்கும் பொருந்தக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இப்பொழுது நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி ஒன்றுதான். வேதத்திலே யாருக்கெல்லாம் பெயர்கள் மாற்றப்பட்டதோ அவர்கள் எல்லா இடத்திலும் நாம் காணும் ஒரு பொதுவான காரியம் இந்த பெயர் மாற்றத்திற்கு முன்பும், பெயர் மாற்றத்திற்கு பின்பும் அவர்கள் வாழ்வில் இருந்த **வித்தியாசம்.**

பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நாம் மீட்கப்பட்டு தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள்ளாக சேர்க்கப்பட்டிருக்கிறோம். நமக்கும் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் இருக்கிறது. அந்தப் பெயரை பெற்று கொண்டிருக்கிற நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த பெயர் நமக்கு கிடைத்ததற்கான காரணம் நாம் நம்முடைய பாவ வாழ்வை விட்டு நீங்கி நீதிக்குள்ளாக நம்மை உட்படுத்தினதே இந்தப் பெயர், இந்த **மாற்றத்தை** தான் வெளிப்படுத்துகிறது. உலகத்தை தன்னிடமாக கொண்டிருந்த ஒரு நபர் இப்பொழுது கிறிஸ்துவைத் தன்னிடமாகக் கொண்டிருக்கிறார் என்பதுதான் கிறிஸ்தவன் என்ற வார்த்தைக்கான அர்த்தம். அந்தப் பெயர் இன்றைக்கு நமக்குப்பொருந்தும் என்று நாம் நினைப்போமானால் மாற்றத்தை வெளிப்படுத்தக் கூடிய வகையில் நம்முடைய வாழ்வு இருக்க வேண்டும். ஆனால், அப்படி இருக்கிறதா?

பிரியமானவர்களே! இந்த வருடத்தின் கடைசி எல்லையில் நின்று கொண்டிருக்கிற நாம் நம்முடைய மனதில் சிந்தித்துப் பார்ப்போம். எனக்கு கிடைத்திருக்கிற '**கிறிஸ்தவன்**' என்ற பெயர் மாற்றம் வெறும் பெயர் அளவில் மட்டும் இருக்கிறதா அல்லது செயல்பாட்டிலும், கிரியையிலும் இருக்கிறதா? இந்த கேள்விக்கான பதிலை கண்டு கொண்டவர்களாக இந்தப் புதிய வருடத்திற்குள்ளாக நாம் செல்வோமானால் நிச்சயமாக அது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். கிறிஸ்துவை பிரதிபலிக்கிற பிள்ளைகளாக வாழ நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

**உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

சிறுவர் பகுதி

# பத்துக் குஷ்டரோகமுள்ள மனுஷர்

**Dr. ப்ரெய்சி**

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் இயேசு செய்த ஓர் அற்புதம் பற்றிப்பார்போம்.

லூக்கா 17:12–19ல் குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் என்று காண்கிறோம். இயேசு ஐயரே, **எங்களுக்கு இரங்கும்** என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள்போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். **அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.** அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, **அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான்.**

என் அன்பான குழந்தைகளே, இந்த அற்புதத்திலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்? இந்த வருடத்தின் இறுதியை நெருங்கும் வேளையில், தேவனின் இரக்கத்துக்காக நாம் ஜெபிக்க வேண்டும். பத்து குஷ்டரோகமுள்ள மனுஷர் போல நாமும் நம் தவறுகளிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்த தேவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். எப்படி, ஆசாரியர்களிடம் செல்ல குஷ்டரோகள்ள மனுஷர் பத்துப்பேர் கீழ்ப்படிந்தார்களோ, அதுபோல நாமும் தேவனுடைய வார்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். எல்லா வற்றிற்கும் மேலாக, அவர் நமக்கு அளித்த அனைத்து ஆசீர்வாதங்களுக்காகவும் நாமும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஒரே ஒரு குஷ்டரோகமுள்ள மனுஷர் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான். அவ்வாறே **இந்த ஆண்டு நாம் பெற்ற அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.**

அன்புள்ள குழந்தைகளே, நன்றியுணர்வு இல்லாத ஒன்பது குஷ்டரோகமுள்ள மனுஷர் போல நாம் வாழ வேண்டாம். எனவே, அவருடைய மன்னிப்புக்காக மன்றாடுவோம், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எல்லாவற்றிற்காகவும் நன்றி செலுத்துவோம்.

**God Bless**
**Happy New Year - 2024**

**With love and prayers ,**
Praisey akka ✝

**கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்**

# 'வாக்குத்தத்தத்தின் மகன் ஈசாக்கு'

**சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை**

**முன்னுரை:**

1. அன்பானவர்களே! சென்ற பாடங்களில் தேவன் ஆபிரகாமை அழைத்து, வாக்குத்தத்தம் கொடுத்து ஆசீர்வதித்தார் என்பதைப் பார்த்தோம்.

2. இன்றைக்கு ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கு எப்படி சமாதானமாக வாழ்ந்தார் என்பதை கவனிப்போம்.

3. அவர் (ஈசாக்கு) சமாதானத்தைத் தேடினதால் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றார். நாமும் தேவனோடும், மற்றவரோடும் நீதியாக சமாதானத்தைத் தேடினால் ஆசீர்வதிக்கப்படுவோம், ரோம. 5 : 1 – 2 ; 12 : 18.

I. **ஈசாக்கு தேவனையும், தன் தகப்பன் ஆபிரகாமையும் மதித்து நடந்ததினால், தேவனுடைய ஆசீர்வாதங்களையும், உதவியையும் பெற்றார் ஆதி. 26 : 2, 3.**

அ. தன் மகன் ஈசாக்குக்கு ஒரு நல்ல விசுவாசமுள்ள பெண்ணை மனைவியாகக் கண்டுபிடிக்கும்படி ஆபிரகாம் தன் வேலைக்காரனிடம் சொன்னார், ஆதி. 24 : 2.

1. அதன்படி ஆபிரகாம் தன் வீட்டிலுள்ள எல்லாரிலும் மூத்தவனும் அதிகாரியுமாகிய எலியேசரை தன் இனத்தாரிடம் சென்று பெண்ணை அழைத்து வரும்படி அனுப்பினார், ஆதி. 24 : 4 ; 15 : 2.
2. இந்த கானான் தேசத்து விக்கிரக ஆராதனைக் குடும்பங்களிலே தன் மகனுக்கு பெண்கொள்ளக் கூடாது என்பதில் ஆபிரகாம் உறுதி யாக இருந்தார், ஆதி. 24 : 3 ; உபா. 7 : 2 – 4 ; 2 கொரி. 6 : 14 – 18.
3. ஆகையால் தேவபயமும் விசுவாசமும் உள்ள குடும்பத்தில் பெண் கொள்ளும்படி அனுப்பினார். ஆனாலும், ஈசாக்கை அங்கே அழைத்துச் செல்லக்கூடாது என்றார், ஆதி. 24 : 5 – 7.
4. அப்படியே அந்த வேலைக்காரன் புறப்பட்டுச் சென்று பெத்துவேலின் மகளாகிய ரெபெக்காளை மனைவியாகக் கண்டு பிடித்தான், ஆதி. 24 : 23, 24.
5. இப்படி ஈசாக்கு தன் 40 வது வயதில் ரெபெக்காளை தன் மனைவியாக்கிக்கொண்டு தன் தாயின் துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான், ஆதி. 24 : 67 ; 25 : 20.

ஆ. ரெபெக்காள் மலடியாயிருந்ததற்காக ஈசாக்கு தன் தகப்பன் ஆபிரகாமைப்போல தேவனிடத்தில் விசுவாசத்தோடு விண்ணப்பம் செய்தான், ஆதி. 25 : 21.

1. பிள்ளைகள் கர்த்தருடைய தயவால் பிறக்கிறார்கள் என்று ஒரு விசுவாசக் குடும்பத்தார் எண்ணிக்கொள்ளுவார்கள், ஆதி. 4 : 1 ; 29 : 31.

2. தேவனுடைய குடும்பத்தார் பிள்ளைகள் கர்த்தருடைய சுதந்தரம் என்றும் எண்ணிக்கொள்ளவேண்டும், சங். 127 : 4.

3. தேவன் கொடுத்த பிள்ளைகளை தேவபக்தியுள்ள சந்ததியாக வளர்க்கவேண்டும் என்பது பெற்றோரின் கடமையாயிருக்கிறது, மல். 2 : 15.

4. பிள்ளைகள் தவறு செய்தால் பெற்றோர் அவர்களை சிட்சித்து ஒழுங்குசெய்யவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார், நீதி. 22 : 6 ; 23 : 13, 14 ;

5. பிள்ளைகளை அவர்கள் போக்கிலே விடாமல் விசுவாசம், தேவபயம், கீழ்ப்படிதல் போன்றவைகளை சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுத்து வளர்க்கவேண்டும், நீதி, 4 : 1 – 10 ; எபே. 6 : 4 ; கொலோ. 3 : 21.

இ. ஈசாக்கின் விசுவாசமுள்ள ஜெபத்திக்காக தேவன் ரெபெக்காளுக்கு இரட்டைப் பிள்ளைகளை தந்தார், ஆதி. 25 : 22.

1. பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பு, இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெரிய ஜாதிகளாவார்கள் என்று ரெபெக்காளுக்கு தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டது, ஆதி. 25 : 23.

2. பெரியவன் ஏசா சிவப்பாகவும் ரோமமுள்ளவனாகவும் பிறந்தான், ஆதி. 25 : 25.

3. ஏசா ஒரு தைரியசாலியாக இருந்ததினால் தகப்பனாகிய ஈசாக்கு அவன்மேல் பட்சமாயிருந்தார், ஆதி. 25 : 28.

4. சிறியவன் யாக்கோபு தயவாக பேசுகிறவனும், வீட்டில் வாழ்கிறவனாக இருந்ததற்காக தாய் ரெபெக்காள் இவன் மீது பட்சமாய் இருந்தாள். ஆதி. 25 : 28.

5. பெற்றோர் பிள்ளைகள்மேல் பாரபட்சமாய் இருப்பதும், பிள்ளைகளிடத்தில் அப்பா பிடிக்குமா அம்மா பிடிக்குமா என்று கேட்பதும், இரண்டுமே தவறு.

**II பஞ்சமும் வறட்சியும் வந்த போது ஈசாக்கு எகிப்திற்கு போகாமல் பெலிஸ்தியர்களின் பட்டணமாகியகேராருக்கு போய் அங்கே கூடாரம் போட்டான், ஆதி. 26 : 1.**

அ. தகப்பனாகிய ஆபிரகாமுக்கு எகிப்திலே வந்த பிரச்சனையைப் போல ஈசாக்குக்கும் வந்தது, 26 : 6, 7.

1. ரெபெக்காளின் அழகின் நிமித்தம் பெலிஸ்தியர் தன்னைக் கொன்று போடுவார்கள் என்று ஈசாக்கு பயந்தான், ஆதி. 26 : 7.

2. அதனால் தன் மனைவியை சகோதரி என்று பொய் சொன்னான், எந்த சூழ்நிலையிலும் பொய் தேவனுக்கு விரோதமாயிருக்கிறது, மேலும், பரிசுத்தத்திற்கு எதிராயிருக்கிறது, தீத். 1 : 3; எபே. 4 : 25.

3. அப்படியிருந்தும் பெலிஸ்தியராஜா அபிமெலேக்கு ஈசாக்கும் ரெபெக்காளும் கணவன் மனைவி என்பதை அறிந்துகொண்டான், ஆதி. 26 : 8, 9.

4. ஈசாக்கு, ராஜாவினால் கடிந்துகொள்ளப்பட்டாலும், தேவன் அதே ராஜாவின்மூலம் ஈசாக்கின் குடும்பத்திற்கு பாதுகாப்பை ஏற்படுத்தினார், ஆதி. 26 : 11.

ஆ. பெலிஸ்தியர் பொறாமைகொள்ளும் அளவிற்கு தேவன் ஈசாக்கை ஆசீர்வதித்தார், ஆதி. 26 : 12 – 16.

1. ஈசாக்கு விதை விதைத்த வருஷத்திலே தேவன் அவனுக்கு நூறு மடங்கு பலன் கொடுத்தார், ஆதி. 26 : 12.

2. மேலும் ஈசாக்கு ஐசுவரியனாகி, மேலும் மேலும் விருத்தியடைந்து மகா பெரியவனானான், ஆதி. 26 : 13.

3. தேவன், ஈசாக்குக்கு ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் அநேகப் பணிவிடைக்காரர்களையும் கொடுத்தார், இதனால், பெலிஸ்தியருக்கு ஈசாக்கின்மேல் பொறாமை வந்தது, ஆதி. 26 : 14.

4. இதனால் ஆபிரகாமின் நாட்களில் வெட்டின துரவுகளை யெல்லாம் பெலிஸ்தியர்கள் தூர்த்து மண்ணினால் நிரப்பினாலும், ஈசாக்கு சண்டை செய்யாமல் சமாதானத்தோடே அவர்களை விட்டுப் போனார், ஆதி. 26 : 16, 17.

5. ஈசாக்கின் மேய்ப்பர் கிணறு வெட்டும்போது மறுபடியும் பெலிஸ்தியர் தகராறு செய்தாலும் சமாதானத்தோடு எதிராளிக்கு அதை விட்டுவிட்டார், ஆதி. 26 : 17 – 22.

6. ஈசாக்கை எதிர்த்த அபிமெலேக்கு அவன் சிநேகிதர்கள் ஈசாக்கோடு சமாதானம் பண்ணும் அளவிற்கு தேவன் ஈசாக்கை உயர்த்தினார், ஆதி. 26 : 26 – 30.

III. சிலவகைகளில் ஈசாக்கு, இயேசுவுக்கு முன்னோடியாய் இருக்கிறார்.

அ. ஈசாக்கும் இயேசுகிறிஸ்துவும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டார்கள், ஆதி. 21 : 4 ; லூக். 2 : 21.

ஆ. ஈசாக்கு மரித்தோரிலிருந்து பாவனையாக திரும்ப எழுந்தார், எபி. 11 : 19 ; இயேசுவும் மெய்யாகவே மரித்தோரிலிருந்து எழுந்தார், அப். 2 : 22 – 24 ; 3 : 15.

இ. ஆபிரகாமுக்கு உண்டான பூமிக்குரிய செல்வம் யாவும் ஈசாக்கிற்கு கொடுக்கப்பட்டது, ஆதி. 25 : 5; தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு பூமிக்குரிய ஆவிக்குரிய சகல அதிகாரத்தையும் கொடுத்தார், மத். 28 : 18.

ஈ. ஈசாக்கு அனைத்து சூழ்நிலைகளிலும் சமாதானத்தையே நாடினார், இயேசுவானவர் நமக்கு சமாதானத்தை கொண்டுவந்தார், யோவான். 14 : 27 ; எபே. 2 : 15 – 17.

உ. சகோதர சகோதரிகளே! நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். கிறிஸ்துவினால் வருகிற வாக்குத்தத்தங்களுக்கு சொந்தக்காரர்களாயிருக்கிறோம், கலா. 4 : 28.

முடிவுரை:

1. பெலிஸ்தியர்கள் சமாதானமான சூழ்நிலையில் ஆபிரகாமின் தேவன் ஈசாக்கிற்கு மீண்டும் தரிசனமானார், ஆதி. 26 : 24 [26 : 2 – 5].

2. தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்ததுபோல ஈசாக்கையும் அவன் சந்ததியையும் ஆசீர்வதிப்பதாகக் கூறினார்.

3. ஈசாக்கின் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்றார்.

4. ஈசாக்கு தன் தகப்பனைபோல தேவனுக்கு பலிபீடம் கட்டி அவருடைய நாமத்தை தொழுதுகொண்டார். ஆதி. 26 : 25.

5. ஆபிரகாமுக்கு தேவன் சொன்னபடியே கூடாரங்களில் தேவன் காண்பித்த இடங்களில் ஈசாக்கு வாழ்ந்தார்.

6. ஈசாக்கு தேவனை சார்ந்து வாழ்ந்ததால் தேவன் அவரோடிருந்து அவரை ஆசீர்வதித்தார், ஆதி. 26 : 3 – 5.

7. நாமும் இன்றைக்கு தேவனை சார்ந்து புதிய ஏற்பாட்டு சத்தியத்தின்படி வாழ்ந்தால் தேவன் ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைத் தருவார், எபே. 1 : 3 ; மத். 6 : 33. ஆமென்.

# பேர் சொல்லி அழைக்கும் தேவன்

சகோ. பாண்டியன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோ, அவர்களே! அந்த இடை வெளியில் தங்கள் பெயரைப் போட்டுக்கொள்ளுங்கள் ! ஏனெனில், நம் தேவனின் முக்கிய அம்சங்களில் ஒன்றுதான் '**பேர் சொல்லி அழைக்கும் தேவன் என்பது!** அநேகர் இவ்வுலகில் நம்மை யாரும் மதிக்கவில்லையே, யாரும் கண்டு கொள்வதில்லையே என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். ஆனால், ஒன்றை நினைவில் வையுங்கள். வானத்தையும், பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை பேர் சொல்லி அழைக்கிறார் ? (ஏசா. 43:1) – '**இப்போதும் யாக்கோபே, உன்னை சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லு கிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன், உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.** இப்போது இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு தேவனுடையப் பிள்ளைகளாகும் அதிகாரம் உள்ளது (யோவான் 1:12) என்பதை மறவாதே!

மனுஷருடைய வாழ்க்கையில் பெயர் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பள்ளியில் சேர்ப்பது முதற்கொண்டு பட்டம் வாங்குவது வரை பெயர் அதி முக்கியம் பிற்பாடு திருமண பதிவேடு, வேலைவாய்ப்பு அலுவலகம், ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை, சொத்து பத்திரம் என ஒருவரின் பெயர் என்பது அவசியமாகிறது. இது பூமிக்குரியது, தற்காலிகமானது, ஒருவர் மரணம் அடைந்த பின் அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது என்கிறது வேதம் (பிர. 9:5). ஆனால், தாய் மறந்தாலும் நம்மை மறவாத தேவன் மறுமைக்கென்றே நம்மைப் பேர் சொல்லி அழைத்திருக்கிறார் என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்று சிந்தித்துப் பாருங்கள்.

சில வேளைகளில் தண்டிக்க பேர் சொல்லி அழைக்கப் படுவதுண்டு, கல்விக்கூடம், போலிஸ் ஸ்டேஷன் போன்ற இடங்கள் அதற்கு உதாரணமாகும். ஆனால், நம் தேவன் ஆபிரகாமைப் பேர் சொல்லி அழைத்துப் பெருமைப்படுத்தினார் (ஆதி. 12:1,2) மேலும், யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டு அவனைப் பலுகிப் பெருகவும், தாம் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தைக் கொடுப்பேன் என்றும் ஆசீர்வதித்தார் (ஆதி. 35:10–12) ஆனால், தேவக் கட்டளையை மீறின ஆதாம் அவருடைய சமுகத்தில் காணப் படாததால் **ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்**? என்று அழைத்தார். நாமும் அவருக்குக் கீழ்படியாமல் விசேஷமாக சபைக் கூடுதலில் இல்லாமற்போனால் **நீ எங்கே இருக்கிறாய்** என்ற (ஆதி. 3:9)

வார்த்தைகள் உங்களையும் அழைக்கிறது! ஆகவே, ஆபிரகாமைப்போல, சாமுவேலைப்போல **இதோ அடியேன்** என்றும் **சொல்லும் அடியேன் கேட்கிறேன்**' என்றும் சொல்லப் பழகுங்கள்.

இருக்கிறவன் எவனும் தோன்று முன்னே பேரிடப்பட்டிருக் கிறான் என்கிறது வேதம் (பிர. 6:10). ஆகவே, நம் தேவன் சகலத்தையும் அறிந்தவராய் நம் மனசாட்சி எனப்படும் இருதயத்தை விட பெரியவராய் இருப்பதால் **'உன்னை உண்டாக்கினவரும் தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கி துணை செய்கிறவர் சொல்வது, என் தாசனே, தெரிந்துகொள்ளப்பட்டவனே பயப்படாதே !** என்கிறார் (ஏசா. 44:1,2). நாம் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் என்பது தியானித்து மகிழ்ச்சியடைய வேண்டிய ஒரு பெரிய காரியமாகும்.

தேவன் நம்மைப் பேர் சொல்லி அழைத்திருப்பது முதலாவது நம்முடைய சஞ்சலம், தவிப்பை நீக்கி சபைக் கூடுதலில் ஆராதனை செய்து சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவதற்காகத்தான் என்று பார்க்கிறோம் (ஏசா.35:10). அது நிரந்தரமான நித்திய மகிழ்ச்சி பரலோகத்திலும் தொடரக்கூடிய மகிழ்ச்சியாகும். அடுத்து, நம்மை மீட்ட தேவன் **பரிசுத்த ஸ்தலத்திற்கு** நேராக வழி நடத்தவே நம்மை அழைத்திருக்கிறார் (யாத். 15:13). பரிசுத்த ஸ்தலம் என்பது நமக்கு பூமியில் சபைக் கூடுதலையும், மறுமையில் பரலோகத்தையும் அடையாளப் படுத்துகிறது. அதேபோல, மோசேயைப் பேர் சொல்லி அழைத்த தேவன் அநேக இக்கட்டுகளில் அவனுடைய ஜெபத்தைக்கேட்டு உதவி செய்தார் (யாத். 33:16,17). அருமையான தேவப் பிள்ளைகளே நம் ஜெபத்திற்கும் தேவன் பதிலளிக்கின்றார்.

(1 ராஜா. 19:9) எலியா ஜெபத்தைக் கேட்டு அக்கினி அனுப்பின தேவன், அவன் மனுஷருக்கு பயந்து ஒளிந்த போது, எலியாவே இங்கே உனக்கு என்ன காரியம்? என்று கண்டித்தான். சாராளை விட்டு ஓடிப்போன ஆகாரிடம் நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய் (ஆதி. 16:8,9) திரும்பிபோய் அடங்கியிரு என்றார் சபைக்கு வெளியே சமாதானம் தேடுவோரைத் தேவன் சபைக்கு திரும்பி கிறிஸ்துவுக்கு அடங்கியிருக்கச் சொல்கிறார்.

சபையில் மாத்திரமே நமக்குப் பிரயோஜனமான போதனைக் கிடைக்கிறது. உலகத்தில் அல்ல (ஏசா. 48:17) அங்கு மாத்திரமே நாம் உண்மை தெய்வத்தைப் பற்றி அறியக்கூடும் என்றே நாம் பேர் சொல்லி அழைக்கப்பட்டிருக்கிறோம் (ஏசா. 45:3). அவரைப் பற்றி நாம் அறிந்துகொள்ளும் போது நமக்கு வாழ்வில் நம்பிக்கையும் தைரியமும் உண்டாகிறது. நம்முடைய பெயர்கள் பரலோகில், ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது (எபி. 12:23). சபையில் இருக்கிறவர்கள் பாவத்திலிருந்து மீண்டு உயிர்ப்பிக்கப்பட்டுள்ளனர். உயிருள்ளவன்

என்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாய் இருந்த சந்தை சபை போல் அல்லாமல் மனந்திரும்பி நாம் ஜெயங்கொள்ளும் போது மட்டுமே கிறிஸ்து நம் பேரை ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கி போடாமல் நம் பேரை பரலோகில் அறிக்கையிடுவார் என்பதை மறவாதே (வெளி. 3:5). தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனையைக் கைக்கொள்ளுவோம். தேவக்கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்!

✞

## தேவையற்ற பேச்சினால் ஏற்படும் விளைவுகள்

1) ஆகாத சம்பாஷணைகள் → நல்லொழுக்கத்தை கெடுக்கும். -1 கொரி. 15-33

2) சொற்களின் மிகுதியால் → பாவம். -நீதி 10-19

3) கடுஞ் சொற்கள் → கோபத்தை உண்டாக்கும் நீதி 15-1

4) வாயின் வார்த்தை → மற்றவர்களை நொறுக்கும் - யோபு 19-2

5) வாயில் இருந்து புறப்படுவது → மனுஷனை தீட்டுபடுத்தும் (கறைபடுத்தும்) - மத் 15-11

6) பெருமை பேசும் நாவை → கர்த்தர் அறுத்து போடுவார் - சங் 12-3

7) பொய் பேசும் வாய் → அடைக்கப்படும் - சங் 63-11

8) நாவு → முழு சரீரத்தையும் கறைபடுத்தும் - யாக் 3-6

9) வாயினால் பாவம் செய்தால் → கைகளின் கிரியை அழிக்கப்படும் -பிர. 5-6

10) உதடுகளை விரிவாக திறந்தால் → கலக்கம் அடைவோம் - நீதி 13-3

11) உதடுகளின் பேச்சு → வறுமையை தரும் - நீதி 14-23

12) இனிய நாவு → எலும்பை நொறுக்கும் - நீதி 25-5

## வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே!

**சகோ. K.M. பிலிப் பவானி**

**அ**ன்பான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் நல்மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மனிதர்களாகப் பிறந்த நாம் ஏதோ ஒரு வகையில் பாரம் சுமக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். இது தவிர்க்க முடியாது. ஒரு பெண் தன் வயிற்றில் குழந்தை பாரத்தை சுமக்கவில்லையென்றால் தாய் என்ற ஒரு ஸ்தானத்தை அடைய முடியாது. பிள்ளை பருவத்தில் புத்தகப் பையை சுமக்கவில்லை யென்றால் பிள்ளைகள் தன் எதிர்காலத்தை சிறப்பாய் அமைத்துக் கொள்ள முடியாது. கூலித் தொழிலாளி பாரம் சுமக்க வில்லை யென்றால் கூலி கிடைக்காது, பிழைப்பு நடத்த முடியாது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடினமான உழைப்பை (பாரத்தை) ஏற்காமல் வாழ்க்கை வாழ முடியாது. இந்த பாரம் கடைமையை, பொறுப்பை, திருப்தியை, செழிப்பை உருவாக்குமே தவிர வருத்தத்தை உண்டுபண்ணாது. அப்படியென்றால், ஒரு பாரம் வருத்தத்தை ஏற்படுத்துகிறது என்றால் அது தேவையற்ற, சுமக்கக் கூடாத பாரமாகும். இப்படி தேவையற்ற பாரத்தை தூக்கி சுமந்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படுவதுதான் கொடுமையான பாரமாகும். உதாரணமாக, ஒரு குடும்பத் தலை வனுக்கு ஒரு மனைவி, ஒரு குடும்பம் – இது சுமப்பது அவசியம், பெருமையும் ஆகும். இதில் வருத்தம் இருக்காது. ஆனால், ஒருவனுக்கு இரண்டு மனைவிகள், இரு குடும்பங்கள் இருக்கு மானால் சுமக்க கூடாத இந்த பாரம் ஓயா வருத்தத்தையே உருவாக்கும். கூலி பெற்று வீட்டிற்கு தேவையானதை வாங்கி சுமந்து வரும் பாரம் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆனால், மதுபானம், போதை பொருள், சிகரெட் போன்றவை சுமந்து வருவதென்பது மிகப்பெரிய வருத்தமேயாகும்.

இதைத்தான் யோபு **வருத்தம் மண்ணிலிருந்து முளைப்பதில்ல**' (யோபு 5:6) என்கிறார். இது நாமாகத் தேடிக்கொள்வதுதான். பிரியமானவர்களே! சாப்பிடுவதற்கு சம்பாதிக்க பாரம் சுமக்க வேண்டியதுதான். ஆனால், சம்பாதித்ததை சாப்பிடுவதற்கு யாராவது வருத்தப்படுவார்களா? அவன் தான் மண்ணில் உதித்த முதல் மனிதன் ஆதாம். ஆசீர்வதிக்கும் தேவன் ஆதாமை சபிக்கிறார். '**நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடு அதன் கனியைப் புசிப்பாய்**' என்கிறார் (3:17). ஏனெனில், புசிக்க வேண்டாம் என்று

தேவன் விலக்கி வைத்த கனியைப் புசித்து தேவ கட்டளையை மீறியதேயாகும். கீழ்ப்படியாமை சாபத்தையும், பாரத்தையும், வருத்தத்தையும் கொடுத்தது. கீழ்ப்படிந்தவரை எவ்வித பாரமும், வருத்தமுமின்றி, சமாதானமாய் வாழ்ந்திருந்தார்கள். இப்பொழுதோ உண்ணும் உணவு கூட பாரமாய் போயிற்று. ஆம் '**உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இவைகளை உனக்கு நேரிடப் பண்ணின இது இத்தனை கசப்பாயிருந்து உன் இருதய மட்டும் எட்டு கிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே**' என்று தேவன் சுட்டிக் காட்டுகிறார் (எரே. 4:18). இதுவே உண்மையாகும். உணரு வோம். '**மாயையைப் பாராதபடிக்கு (தேவ தூதர்களாவீர்கள்) நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்**' (119:37) என்று ஜெபிப்போம். நடப்போம். வருத்தப்பட்டு பாரம் சுமக்காமல் வாழ்வோம்.

வருத்தம் மண்ணிலிருந்து முளைப்பதில்லை. இங்கு எலிமலேக்கின் மனைவி நகோமி, '**சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பை கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய் போனேன். கர்த்தர் என்னை வெறுமையாய் திரும்பி வரப்பண்ணினார்**' என்று (ரூத். 1:20,21) புலம்புவது தாங்க முடியாத பாரம் தான். ஆனால், உண்மை என்ன ? தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் பஞ்சம் வந்த போதும் தேவனுடைய நகரமாகிய எருசலேமை விட்டு வெளியேறவில்லை. ஆனால், நகோமியின் குடும்பம் தேவ பராமரிப்பை உணராமல் தேவனுடைய நகரத்தை விட்டு விலகிச் சென்றதோடு தேவனால் வெறுக்கப்பட்ட மோவாபியரோடு உறவு வைத்துக் கொண்டார்கள். இவைகளைத் தடுத்து நிறுத்தி தன் வீட்டை கட்ட வேண்டிய புத்தியுள்ள ஸ்திரி, நகோமி பொறுப்பை உணராததால், தேவ ஆலோசனைகளை அசட்டை செய்ததால் கணவனையும், இரண்டு ஆண் பிள்ளைகளையும் இழந்து வருத்தப்பட்டு பாரம் சுமந்தவளாய் புலம்பினாள். தேவன் நம் வாழ்க்கையில் செய்து வரும் நன்மைகளை மறந்து சபையை விட்டு விலகி தேவ ஆலோசனை களை அசட்டை செய்வோமானால் நாமும் கூட வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களாவோம். மாறாக, நம் வாழ்க்கையை தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து காத்திருப்போம். '**கர்த்தருக்குக் காத்திருப்போர் வெட்கப்பட்டுப் போவதில்லை**' தேவன் இளைப்பாறுதல் தருவார்.

தேவமக்களான இஸ்ரவேலர்களைக் குறித்து எரே. 4:1-ல் **நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிட்டால் நீ இனி அலைந்து திரிவதில்லை**' என்கிறார். மேலும், விக்ரகங்கள், பொய் உதடுள்ளவன், மாறுபாடுள்ளவன், மனமேட்டிமையுள்ளவன்,

நீதிமானை குற்றவானாக்குபவன், தேவன் இல்லையென்போர் இவர்களெல்லாம் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் நீதி. 12:22; 16:5; 11:20; 17:15; சங்.14:1]. இவைகள் இஸ்ரவேலர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் பொருந்தும். எகிப்தின் அடிமைத்தனத்தில் பாரம் சுமந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்த இஸ்ரவேலரை மோசே, ஆரோன் மூலம் விடுவித்து பாலும், தேனும் ஓடுகிற செழிப்பான நகரமான கானானுக்குள் பிரவேசிக்க அழைத்து வந்தார். அவர்களோ தேவ வழிநடத்துதலை, வாக்குத்தத்தங்களை, தேவனையே மறந்தவர்களாய், தேவன் அருவருக்கிற விக்ரக ஆராதனைக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். இச்செயலால் 40 நாட்களில் செல்ல வேண்டிய கானானுக்குள் 40 வருடங்கள் அலைந்து திரிந்து, 6 லட்சம் புருஷர்களையும் இழந்து கானானுக்குள் பிரவேசித்தார்கள். இதே இஸ்ரவேல் மக்கள் தேவ வார்த்தைக்கு கீழ்படிந்து, அருவருப்புகளை அகற்றிவிட்டு மெய்யான ஜீவனுள்ள தேவனுக்கு மட்டும் கீழ்ப்படிய, ஆராதனை செய்ய தங்களை ஒப்புக்கொடுத்து வாழ்ந்த போது, '.... **அவர்களைச் சுற்றிலும் யுத்தமில்லாமல் இளைப்பாறப் பண்ணினார்** [யோசுவா 21:44]. அன்பான பரிசுத்தவான்களே நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் நம்மை தீட்டுப்படுத்தும் அருவருப்பான எல்லா வற்றையும் நீக்கிப் போடுவோம், நம் வாழ்நாள் முழுவதும் இளைப் பாறுதலே. அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் [1 பேதுரு 5:7]. அப்பொழுது வருத்தப்பட்டு பாரம் சுமக்க வேண்டிய அவசியமில்லை.

கொல்கொதாவில் இயேசுவின் சிலுவைக்கருகில் இருந்த ஒரு கள்ளன் இயேசுவின் ஜீவனுள்ள வார்த்தைகளை கவனித்தான். அது அவன் உள்ளத்தை உடைத்தது. அவன் செய்த பாவங்களின் பாரம் மனதை தாக்கியது. நித்தியத்தை இழந்து விடுவேனோ என்று ஆத்ம பாரம் அவனை வருத்தப்படச் செய்தது. மானசீகமாக இயேசுவை நெருங்கினான். தன் பாவங்களை உணர்ந்து தாழ்த்தினான்; ஆண்டவரே! என்று கெஞ்சி விண்ணப்பித்தான். அவன் கதறுதலை கேட்ட இயேசு அவனது சகல பாவ பாரத்தையும் நீக்கிப்போட்டு தன்னோடு நித்திய இளைப்பாறுதலுக்குள் சேர்த்துக் கொண்டார். பிரியமானவர்களே! **வருத்தப்பட்டு பாரம் [பாவ பாரம்] சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள்**' என்று, இன்றும் இயேசுவின் இரக்கம் இமைப்பொழுதும் விலகாமல் நம்மை நெருங்கி வருகிறது. நம் நிலை என்ன? பாவ பாரமா? வருத்தமா? இளைப்பாறுதலா? தேவனிடத்தில் தாழ்த்தி, '**வேதனை உண்டாக்கும்**

**வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்**' என்று ஜெபிப்போம். தேவன் நம் பாரங்கள் வருத்தங்களை நீக்கி பூமியிலும், இயேசுவின் வருகையில் நித்தியத்திலும் இளைப்பாறுதல் தருவார்.

இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டியது தேவன் நம் பாரங்களை நித்தியத்திலம் இளைப்பாறுதல் தருவார். குமாரன் மூலம் சுமந்து தீர்த்துவிட்டார் [ஏசாயா 53:12]. இன்று மனிதன் சுமக்கும் குடிபோதை, புகையிலை, வேசித்தனம், பொய், பொறாமை ஏமாற்றுதல் போன்றவை சரீரத்தை கெடுத்து வருத்தம் சுமக்கச் செய்கிறது. இதில் தேவ பிள்ளைகள் உணர வேண்டியது, நம் சரீரம் பரிசுத்த தேவன் தங்கும் ஆலயம். ஒருவன் தேவனுடைய ஆலயத்தை [சரீரத்தை] கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார் என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இதில் அசட்டைக்கோ, அஜாக்கிரதைக்கோ இடமேயில்லை. நம் சரீரத்தை ஜீவ பலியாக, பரிசுத்தமாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து பரிசுத்தமாய் காத்துக்கொள்வோம்[ 1 கொரி. 3:16,17; ரோமர் 12:1]. பரிசுத்த சரீரத்தில் பாவத்திற்கு இடமில்லை. பாவம் இல்லாத இடத்தில் பாரத்திற்கு, வருத்தத்திற்கு இடமில்லை. எப்பொழுதும் சமாதானம், சந்தோஷமே.

அன்பான தேவபிள்ளையே! உலக பாரத்தால் வீண் சுமைகளை சுமந்து வருத்தப்படாமல், '**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அதுவே போதுமென்றிருக்கக்கடவோம் [ 1 தீ, 6:6,8 ]. 'நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தாங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்**' என்பதை புரிந்து வாழக்கற்றுக் கொள்வோம்.

நிறைவாக, நாம் சுமக்க வேண்டிய பாரம் ஒன்று உண்டு. அதுதான் ஆத்தும பாரம். இரட்சிக்கப்பட்ட நம் ஆத்துமாவோடு, நம் குடும்பத்தினர், சபை விசுவாசிகளின் ஆத்துமாக்களையும் நிலை நிறுத்த பாரத்தோடு ஜெபிக்க வேண்டும். நம்மை சுற்றி பாவ பாரத்தோடு அலைந்து திரியும் மக்கள் சத்தியத்தை அறிந்து பாவ விடுதலை பெற்று சபைக்குள் வந்து இளைப்பாறும்படியான ஆத்தும இரட்சிப்பைப் பெற இயன்றதை மழு மனதோடு செய்ய வேண்டும். இது பாரமோ, வருத்தமோ அல்ல. மாறாக, நமக்கும் சார்ந்தவர்களுக்கும், பரலோகத்திலும் மகிழ்ச்சியை உருவாக்கும் [வெளி 21:3,4]. ஆமென்!!

✝

# யூதர்கள் இன்றைக்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமா?

**டான் பிளேக்வெல்**

**இ**து சூடான விவாதத்துக்குரிய ஒரு கேள்வி. இணையதளத்திற்குச் சென்று இதற்காக ஒரு துரிதமான தேடலை மேற்கொண்டால், இக்கேள்விக்கு ஆதரவாகவும், எதிராகவும் கடுமையாக வாதிடுபவர்களைக் காண முடியும். சில வேளைகளில், உலகத்தின் பல நாடுகளின் ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும், யூதர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் என்ற பார்வை கொண்டிருப்பதால் இஸ்ரவேலை சிறப்பாகக் கருதி அதற்கேற்றாற் போல் முடிவுகளை எடுக்கிறார்கள். நிச்சயமாக, நாம் தெரிந்துகொள்ள விரும்புவது, இக்கேள்விக்கான பதிலுக்கு வேதாகமம் என்ன சொல்கிறது என்பதே.

முதலில், யூதர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாக ஒரு காலத்தில் இருந்தவர்களென்பது தெளிவான ஒன்று. உபாகமம் 7:6–ல், மோசேயின் வழியாக யூத தேசத்துக்கு கர்த்தர்; '**நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்**' என்றான் ஆனால், இங்கே சொல்லப்பட்டதின் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, வேதாகமத்தின் ஆரம்ப கட்டத்துக்குத் திரும்ப வேண்டும். ஏதேனில், ஆதாம், ஏவாள் பாவம் செய்த பிறகு, தேவன் பிசாசிடம், அவர் சர்ப்பத்திடம், '**உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்**' என்றார் (ஆதி. 3:15). சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று சொல்லப் பட்டிருக்கும் ஸ்திரீயின் வித்து இயேசுவைக் குறிப்பது. ஒரு ஸ்திரீயின் வழியாக இயேசு இவ்வுலகில் பிறப்பார் என்பதற்கான ஒரு தீர்க்கதரிசனம் இது. அடுத்து 9 அதிகாரங்களுக்கு பிறகு, ஆதியாகமம் 12:2–3 வசனங்களில், கீழ் வரும் வாக்குத்தத்தை தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்தார். தேவன் இவ்விதம் சொன்னார், '**நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர் களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்**' **என்றார்.**

இப்பொழுது இந்தப் பகுதியை கவனியுங்கள். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். நண்பர்களே,

இதுவும் கூட இயேசுக் கிறிஸ்துவைக் குறிக்கும் ஒன்றுதான். ஒரு பெண்ணின் வழியாக இயேசு உலகத்தில் பிறப்பார். குறிப்பாக, ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வருவார். ஆபிரகாம் யூத தேசத்தின் தந்தை. நண்பர்களே, இதினிமித்தம் தான் யூதர்கள் ஒரு தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம். அவர்கள் வழியாகத்தான் மேசியா வருவார். தோராயமாக 2000 ஆண்டுகள் கழித்து, ஒரு பெண்ணிடம் – குறிப்பாக ஒரு கன்னியிடம் – பெத்லகேம் நகரில், ஓர் யூதனாக இயேசு பிறந்தார். அன்பர்களே, தேவன் இஸ்ரவேலைத் தம்முடைய தெரிந்து **கொள்ளப்பட்ட ஜனம்** என்பதற்கான உந்துதல் இதுதான். இதினிமித்தம் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அவர்கள் வழியாக ஒன்றான மீட்பர் வந்தார்.

நாம் பதிலளிக்க வேண்டிய கேள்வி இதுதான்: யூதர்கள் இன்றைக்கும் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமா? இக்கேள்விக்கான பதில்: இல்லை. இன்றைக்குக் கிறிஸ்தவர்கள் தான் தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் மிகவும் கவனமாக 1 பேதுரு 2:9–ஐ, கவனிக்க வேண்டுகிறேன். இது குறிப்பாகக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. 'நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி ராஜரீகமான ஆசாரியக் கூட்டம், பரிசுத்த ஜாதி, கவனியுங்கள் அவருக்கு சொந்தமான ஜனம்! வசனம் 10 இப்படிக் கூறுகிறது '**முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களா யிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.**' ஆக, இன்றைக்கு யார் தேவனுடைய ஜனங்கள் ? நண்பர்களே, தேவனுடைய ஜனம் இஸ்ரவேல் தேசம் அல்ல. மரபியல் ரீதியாக யூதராகப் பிறவாத கிறிஸ்தவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம். கொலோசெயர் 3:11–ஐ கவனியுங்கள், இது கிறிஸ்துவுக்குள் கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை என்கிறது. இதன் பொருள் என்ன? தேவனுடைய பிள்ளையாக இருக்கிற காரியத்தில் உலகியல் ரீதியான பாரம்பரியம். முக்கியமானதல்ல. கலாத்தியர் 3–ஐ கவனியுங்கள் 'நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள் (3:26). உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்க னென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை,

நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். மிகுந்த எச்சரிப்போடு வசனம் 29–ஐ கவனியுங்கள். **நீங்கள் கிறிஸ்து வினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியராயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.** அந்த வாக்குத்தத்தம் எது? ஆதியாகமம் 12–ம் அதிகாரத்திலுள்ள வாக்குத்தத்தமே. அப்படியானால், இந்தப் பகுதியின் பொருள் என்ன?

நண்பர்களே! இங்கே அதற்குப் பொருள் இருக்கிறது. இன்றைக்குக் கிறிஸ்துவின் காலத்தில், யார் வேண்டுமானாலும் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகளாயிருக்க முடியும். இது மரபியல் ரீதியான பிறப்பைச் சார்ந்ததல்ல. **இது புதிய பிறப்பை** அடிப்படையாகக் கொண்டது. இது, நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தரைத் தரித்துக் கொள்வதை **அடிப்படையாகக் கொண்டது.** இதை நீங்கள் செய்தால், நீங்கள் ஆவிக்குரிய ரீதியில், ஆபிரகாமின் சந்ததியாராயிருப்பீர்கள். அதைவிட முக்கியமாக, நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்கள்.

✝

## சீக்கிரமாய் நடக்கப் போவது

1. நமது மரணம் - சங்.*90:10*,2 பேதுரு *1:13*
2. கர்த்தருடைய நாள் - 2 பேதுரு *3:12*
3. கர்த்தர் வருகை. - வெளி.*3:11,22:12*
4. நமது உபத்திரவம் சீக்கிரமாய் நீங்கும்.
   - 2 கொரி. *4:17*
5. தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கி போடுவார்
   -ரோமர் *16:20*

## 17.12.2023 திருப்பூரில் நடந்த இலவச மருத்துவ முகாமின்போது...









## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026




"Registered" with RNI No: TNTAM/2006/20466
Postal regn. No. Erode/26/2021 - 2023
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.


# எங்களது இதர வெளியீடுகள்


**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 – 7:00 மணி |
| வெள்ளி | காலை 6:30 – 7:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.